பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 13 ஞாயிற்றுக்கிழமை 25.02.2024 கதிர் 110

# ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில்

## சம்பிக்கவிடம் ரணில் உறுதி



ஜனாதிபதித் தேர்தல் குறித்த காலத்தில் நடத்தப்படும் அதே நேரம்பொதுத்தேர்தலைஅடுத்த வருட முற்பகுதியில் நடத்த எதிர்பார்த்துள்ளார் என்று ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவிடம் 2

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பல்வேறு வழிகளில் ஒத்திவைத்தது போன்று ஜனாதிபதி தேர்தலையும் ஒத்திவைக்க ரணில் தரப்பு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது ஆனால் அதில் வெற்றி பெறுவதற்கான சூழல் தற்போது வரையில் கிட்டவில்லை. ஜனாதிபதித் தேர்தலை எப்படியும் நடத்தியே ஆகவேண்டிய சூழல் நோக்கியே ரணில் தள்ளப்பட்டுவருகிறார். ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவும் அனுரகுமார திஸநாயக்கவும் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. ஆனால் ஆளும் தரப்பின் வேட்பாளர் யார் என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.

இதன் காரணமாக, பல்வேறு விளையாட்டுகளும், சதிகளும், 2

ரணிலுக்கு ஆதரவாக

## 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய கூட்டணியில் இணைவர்

கல்வி அமைச்சர் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் எம்முடன் இணைய தயாராகவுள்ளனர்என்றுபுதியஅரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்ட தலைவரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

புதிய அரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்ட முதலாவது பொதுக்கூட்டம் நேற்று ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெற்றது. 8

## ஜனாதிபதி தேர்தலில் ரணில் நிச்சயம் போட்டியிடுவார்

ஐ.தே.க.க. பிரதிநிதி தெரிவிப்பு

ஜனாதிபதித்தேர்தலில் ரணில் போட்டியிடுவார். எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவார் என்று தெரியாது. ஆனால் போட்டியிடுவார் என்று ஐக்கியதேசியக்கட்சியின் கேகாலை மாவட்டத் தலைவரும், சப்ரகமுவ மாகாண ஆளுநருமான நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்டத் தொகுதிக் கூட்டம்நேற்றுநடைபெற்றது. அங்கு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

## உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டேயாக வேண்டும்

ரிஷாத் பதியூன் வலியுறுத்து

உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அப்போது தான் வெளியேற்ற வேண்டியவர்களை மக்கள் வெளியேற்றுவார்கள் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

கற்பிட்டியில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பின் செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் 17க்கு முன்னதாக அறிவிக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும். ஆனால் அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தினைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

எம்மைப்பொறுத்தவரையில் தற்போதைய நாடாளுமன்றத்திற்கு மக்கள் ஆணை கிடையாது. மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தான் நாடாளுமன்றில் உள்ளார்கள். குறிப்பாக, 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றவரை ஆட்சியிலிருந்து மக்கள் வெளியேற்றியுள்ள நிலையில், அவருக்கு ஆதரவானவர்களே நாடாளுமன்றத்தில் உள்ளார்கள்.

ஆகவே, 2

## இறக்குமதிப் பொருள்களின் விலை அடுத்த மாதம் முதல் குறையலாம்

அமைச்சர் நளின் பெர்னான்டோ தெரிவிப்பு

ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பயனை அடுத்த மாதம் முதல் நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என்று வர்த்தகஅமைச்சர்நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். அதற்காகஇறக்குமதி வர்த்தகர்களுடன் பேச்சு நடத்தப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும்தெரிவித்ததாவது:

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கடந்த சில மாதங்களாக படிப்படியாகவலுவடைந்து வருகிறது. இதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பயன், மார்ச் முதல் வாரத்தில் இருந்து பொதுமக்களுக்கு கிடைக்குமென்ற நம்பிக்கை உள்ளது.

எதிர்வரும் 2

## சுதந்திரக் கட்சி மகளிர் அணி நிர்வாகத் தெரிவில் குழப்பம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் முன்னணிக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் செயற்பாடுகளில் இணக்கப்பாடின்மை ஏற்பட்டமையால் அதனை ஒத்திவைப்பதற்கு நேரிட்டதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் திசுரகுணசிங்க தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய நிர்வாகிகளுக்கான தேர்தலின் போது இணக்கப்பாடற்ற நிலை ஏற்பட்டமை 2

## ரணில் தொடக்கி வைக்க கொழும்பில் நவம் பெரஹரா

கங்காராம விகாரையின் நவம் மகா பெரஹரா ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது

சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கங்காராம விகாரையின் நவம் மஹா பெரஹராவை நவீன தொழில்நுட்பத்துடன் சிறப்பான பெரஹரா விழாவாக மாற்ற பக்தர்களின் ஒற்றுமை உதவியுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு, ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் வருடாந்த நவம் பெரஹெராவை நேற்று (23) 2



காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

வதந்திகளும் ஆளும் தரப்புப் பக்கமிருந்து எல்லை மீறுவதைக் காணமுடிகிறது. ஆளும்தரப்புக்குள் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தம்மிக்கபெரேராவின்பெயர்கள்ஆளும் தரப்புக்குள் முன்மொழியப்பட்டுள்ளன, ஆனால் இதுவரை இறுதித் தீர்மானம்எடுக்கப்படவில்லைஎன்பது உறுதி. தம்மிக்கவை ஜனாதிபதி வேட்பாளராகவும், ரணிலைப் பிரதமர் வேட்பாளராக நிறுத்தவும் ஆளும் தரப்புக்குள் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றனஎன்றுகூடச் செய்திகள் வந்தன.

இது தொடர்பில் தம்மிகவுக்கும் ரணிலுக்கும் இடையில் மூன்றாம் தரப்பினர் ஊடாக கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாகவும், இரு தரப்பினரும் மேலும் கலந்துரையாடுவதற்குஇணக்கம்தெரிவித்துள்ளதாகவும் கூறப்ப-டுகின்றது. தம்மிகா வெளிநாட்டில் இருக்கிறார், அதனால் இது தொடர்பில் அவரது கருத்துக்களைப்பெறமுடியவில்லை.

இதற்கிடையில்ஆளும்தரப்பிலிருந்து மற்றொரு முயற்சியும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதன்படி முதலில் பொதுத் தேர்தலுக்குச் சென்று அதில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச பிரதமராகியதும் புதிய ஆட்சியை அமைப்பது எனவும் அதன் பின்னர் அரசமைப்புத் திருத்தப்பட்ட ஜனாதிபதியிடம்உள்ளநிறைவேற்றுஅதிகாரங்கள்நாடாளுமன்றத்திற்குமாற்றப்படுவதன் மூலம் சஜித்திடம் அவை கையளிக்கப்படும்எனவும்அதற்குப் பதிலீடாக சஜித் ஆட்சியின் கீழ் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ரணிலுக்கேஅந்தப்பதவிதொடர்ந்து வழங்கப்படவேண்டும்எனவும்ஒரு முன்மொழிவு வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள மூத்த தலைவர்களுக்கு ஆளும் தரப்பிலிருந்து இந்த தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளன.

ஆனால், நாட்டைவங்குரோத்து அடையச்செய்த ராஜபக்சக்களுடன் ஒன்றரை வருடங்களாக ஆட்சி செய்து வரும் ஜனாதிபதியுடன் எந்த ஒப்பந்தத்திற்கும் போகப் போவதில்லை என்பதில் சஜித் இதுவரை பிடிவாதமாக இருக்கிறார் என்கிற பின்னணியில் இந்த யோசனை எடுபடுமா என்று அவரது கட்சிக்குள்ளேயேபலர்சந்தேக்கின்றார்கள்.

இப்படிரணில்தரப்புஒருபுறத்தில் மும்முரமாக அரசியல் காய்களை நகர்த்திக்கொண்டிருக்கும்போது, மறுபுறத்தில் மொட்டுக் கட்சியின் தேசியஅமைப்பாளர்பஸில்ராஜபக்ச அமெரிக்காவில்இருந்தபடியேதனது அரசியல் காய் நகர்த்தல்களைத் தொடங்கிவிட்டார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை குறிவைத்து திரைமறைவில் பல வேலைகளில் அவர்ஈடுபட்டுவருகின்றார்என்பதை உறுதிப்படுத்த முடிந்துள்ளது. டிசெம்பரில் அமெரிக்கா சென்ற பஸில், ஜனவரி மீண்டும் இலங்கை வந்து தீவிர அரசியலில் ஈடுபடத் தயாராக இருந்தார். ஆனால் பெப்ரவரி முடிய இன்னும் சில நாட்களே இருந்தபோதிலும் பஸில் இலங்கைக்குத் திரும்பி வரும் அறிகுறிஎதுவும்இல்லை.மார்ச்மாதத் தொடக்கத்தில்இலங்கைக்குத்திரும்பி தீவிர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என்று நம்பகமாகத் தெரியவருகின்றது.

இருப்பினும், அமெரிக்காவில் இருந்தபடியே மகிந்த, -நாமல் மற்றும்சாகரவுடன் பஸில் அடிக்கடி அரசியல் பற்றிப் பேசி வருகின்றார். தற்போதைய அரசியல் சூழ்நிலைகள்குறித்துகருத்துக்களை பரிமாறிக்கொள்கிறார். தேவையால் ஆலோசனைகளை வழங்குவதும் பஸிலின் வாடிக்கையாகிவிட்டது. அங்கிருந்தபடியே இங்கு அரசியல் கருத்துக்கணிப்புக்களை நடத்தியும் வருகிறார் பஸில். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆளும் தரப்புக்குள் தற்போது நிலவும் குழப்பம் தொடரவேண்டும் என்பதும் மே மாதம் வரைக்கும் இந்தப் பிரச்சினை இழுபட்டு நிலைமை உக்கிரமடையும்போது மொட்டுக் கட்சி தனது அரசியலைத் தொடங்க வெண்டும் என்பதும் பஸிலின் தற்போதையதிட்டமாகஇருக்கின்றது.

பஸில் இதுவரை நடத்திய கருத்துக் கணிப்புக்களின் மூலம் கிராம மட்டத்தில் மொட்டுக் கட்சிக்கு இன்னும் 20% - 25% வாக்குகள் உள்ளதாகத் தெரியவந்திருக்கிறது. அதனை மேலும் அதிகரிக்க மகிந்த தலைமையில் தேர்தலை எதிர்கொள்வது என்றும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவைப் போட்டியிட வைக்கவேண்டும் என்றும் அந்தக் கருத்துக் கணிப்புக்களின் முடிவுகள் தெரிவிக்கின்றனவாம். மொட்டுச் சின்னத்தில் ரணிலோ அல்லது வேறுயாருமோ போட்டியிட்டால் இந்த ஆதரவுத் தளம் இன்னும் வீழ்ச்சியடையும்என்றும்தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம். இதனால் மொட்டுக்கட்சிஅடுத்துவரும்தேர்தல்களில்தனித்துப்போட்டியிடாவிட்டால் கட்சியின் அரசியல் மட்டுமன்றி ராஜபக்சக்களின் அரசியலும் அடியோடுநாறிவிடும்என்பதேபஸிலின் கருத்தாகத் தற்போதுவரை இருக்கின்றது என்றே சொல்லப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று உறுதியளித்தார்.

ஐக்கியகுடியரசுமுன்னணியின் 'நாட்டிற்கான ஒன்றுபட்ட நடவடிக்கை' என்ற தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் கொழும்பில்உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றது.

ஐக்கியகுடியரசுமுன்னணியின் தலைவரும், நாடாளுமன்றஉறுப்பினருமானபாட்டலிசம்பிக்கரணவக்க உள்ளிட்டகுழுவினர், ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், குறித்த முன்மொழிவை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டின் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை உறுதிப்படுத்த ஆளும் தரப்பு கடந்த இரண்டுவருடங்களில்கடுமையாக உழைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மறுசீரமைப்புத் தீர்மானங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மிகச்சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு ஆட்சியாளர்கள் செயற்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரினதும் ஆதரவுடன் அதனை மேலும் நடைமுறைப்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

அரசியல்பேதமின்றிநாட்டிற்கான பொதுவான வேலைத் திட்டத்தில் இணையுமாறுஅனைத்துஅரசியல் கட்சிகளுக்கும் விடுத்துள்ள திறந்த அழைப்பையும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக்கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் அனைத்து சாதகமான முன்மொழிவுகளையும் உள்ளடக்குவதற்குதயங்கமாட்டேன் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புதொடர்பானசர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சில் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்குமாறு நாடாளுமன்றஉறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி நல்ல பதிலை வழங்கினார்.

தேர்தலை நடத்துவது தொடர்பிலான கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதித் தேர்தல் குறித்த நேரத்தில் நடத்தப்படும் எனவும், அடுத்த வருட ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், காலநிலை மாற்றம்தொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின்பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரும், ஐக்கிய குடியரசு முன்னணியின் சார்பில்கரு பரணவிதான, நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, சட்டத்தரணி ஷிரால்லக்திலக ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இறக்குமதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடியுள்ளோம்.

டிசெம்பர் 29 அமெரிக்க டொலரொன்றின் விற்பனை விலை 328 ரூபா 77 சதமாக பதிவாகியிருந்தது. தற்போது அமெரிக்க டொலரின் விற்பனை விலை 316 ரூபா 06 சதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

## உரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு உரியவாறு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான்மக்களின் ஆணைசெல்லுபடியானதாகமாறும். அதேநேரம், மக்கள் வெளியேற்ற வேண்டியவர்களையும்அனுப்புவார்கள். அவ்வாறு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால் நாம் எமது கட்சியின் உயர் பீடத்தினைக் கூட்டி அதில் ஆராய்ந்து தேசிய கட்சியுடனான கூட்டணி தொடர்பில் முடிவுகளை எடுப்போம் என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைப் பொதுவேட்பாளராகக் களமிறக்கி நாட்டின் தலைவராக்கும் யோசனையை நான் முன்வைக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்று கூறுகின்றார்கள். முதலில் பொதுத்தேர்தல் தான் நடைபெறும் என்றும் கூறுகின்றார்கள்.

உண்மையிலேயே ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாது விட்டால் நாம் இவ்வாறு கடும் சிரமங்களுக்குமத்தியில்உங்களைச் சந்திக்க வந்திருக்க மாட்டோம். நாம் போட்டியிடும்சின்னம்என்னவென்று எமக்குத் தெரியாது. அந்த விடயம் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் பரந்துபட்ட கூட்டணியில் நாம் தீர்மானிப்போம். அதுவொரு பிரச்சினையல்ல - என்றார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துவைத்தே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மங்களஹஸ்திராஜயாயானைமீது கரடுவ வைத்து பெரஹெராவை ஆரம்பித்து வைத்தார்.

கங்காராமவிகாரையின்டிஜிட்டல் இணையத்தளமும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவினால்திறந்து வைக்கப்பட்டது.

நவம் பெரஹெராவிற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பார்வையாளர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்க இம்முறை கங்காராம விகாரை செயற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்குமேலும்கருத்துதெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது:

முன்னாள்ஜனாதிபதிபிரேமதாசவிடம் கங்காராம பொடி ஹாமதுருவோ (தேரர்) விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் பெரஹெரா தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னர் அரச அனுசரணையுடன் இது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த 45 ஆண்டு காலத்தை கருத்தில் கொண்டால், இன்று தொழில்நுட்ப ரீதியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. டிஜிட்டல் இணையதளம் மூலம் பெரஹெராவைக் காணவும் வாய்ப்பும் உள்ளது.

இந்தப் பெரஹராவுக்கு ஏராளமான அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களின் உதவி கிடைக்கிறது. நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய பெரஹராவையும், இன்றைய பெரஹராவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இன்றைய பெரஹராவில் தொழில்நுட்ப முன்னேற்றம் மிக அதிகம். இது பக்தர்களின் பலத்தை காட்டுகிறது. அதிகளவில் வந்துள்ள பக்தர்களால் இந்தப் பெரஹெராஇன்றுவண்ணமயமாக மாறியுள்ளது. இதற்கு உதவிய அனைவருக்கும் நன்றி.

முன்னாள்ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ச, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தனஜனாதிபதிதொழிற்சங்க அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உட்பட பெருந்தொகையான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ரணிலை ஆதரிக்கும் கூட்டணியில் வியாழேந்திரன் எம்.பியும் இணைவு

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் புதிய கூட்டணியில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் இணைந்து கொண்டார். மார்ச் மாத இறுதிக் குள் மேலும் பலர் தம்முடன் இணையவுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர்நிமல்லன்சாதெரிவித்தார்.

புதிய அரசியல் கூட்டணியின் கொழும்புமாவட்டமுதலாவதுபொதுக் கூட்டம்நேற்றுஹைட்பார்க்மைதானத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டுஉரையாற்றும்போது அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமதுகூட்டணியில்ஐக்கியமக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இடதுசாரி அணிகள் என்று பல்வேறு தரப்பினரும் கைகோர்த்துள்ளார்கள்.

அவர்கள் யதார்த்தம் பற்றியே சிந்திக்கின்றார்கள். அவர்கள் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவே எம்முடன் இணைந்து கொண்டுள்ளார்கள்.

தற்போது வியாழேந்திரன் எம்முடன்இணைந்துள்ளார். அடுத்து வரும் நாட்களில் பல சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் எம்முடன் கைகோர்க்கவுள்ளனர். குறிப்பாக மார்ச் மாத இறுதிக்குள் எம்முடன் மிகமுக்கியதலைவர்கள்இணைந்து கொள்வார்கள் என்றார்.

# இந்தியா போன்றே இலங்கையும் ஒரே குடையின் கீழ் வரவேண்டும்

### ஜேவிபி தலைவர் அனுரவின் விருப்பம்

இந்தியாவைப்போன்றுநாட்டை ஒருகுடையின் கீழ் கொண்டு வரவேண்டும்என்று தேசியமக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஓய்வுபெற்றமுப்படையினருடன் கண்டியில் நேற்று நடந்த சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்டோபர் 17க்குப் பின்னர் ஒருநாளேனும்ரணில்விக்கிரமசிங்க பதவியில் நீடிப்பாராக இருந்தால் அது பெரும் சூழ்ச்சியாகும். ரணில் விக்கிரமசிங்க தந்திரமானவர் என்பது பொய்யாகும்.

அவர் ஒக்டோபர் 17க்கு முன்னதாக அமைதியாக பதவியை துறந்து ஐந்தாம் வரிசைக்கச் சென்று அவர் வீட்டில்அமர்வார். எமதுகண்களுக்கு முன்னால் அனைத்து துறைகளும் வீழ்ச்சி அடைந்துள்ள ஒரு நாடே இருக்கின்றது.

நாம் கிரியெல்லவுக்குப் பதிலாக அவரது மகளை அதிகாரத்துக்கு கொண்டுவரும் வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவில்லை. அதேபோன்று ராஜபக்சக்களின் பரம்பரையை அதிகாரத்தில் நிலைநிறுத்துவதற்காக வேலைத்திட்டத்தினையும் முன்னெடுக்கவில்லை.

இந்தியாவைப்போன்றுநாட்டை ஒருகுடையின் கீழ் கொண்டு வரவேண்டும். எமது நாட்டுக்கு ஏற்றவாறான பொருளாதாரத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகளாவிய ரீதியில் சிறந்த நாடாக இதனை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணம் வரவேண்டும். எமக்கு 1948இல் சுதந்திரம் கிடைத்தது. அதன் பின்னர் 1949இல் தமிழ் மக்களின் குடியுரிமைபறிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாடு பின்னோக்கி கொண்டு செல்லப்பட்டது.

2005ஆம் ஆண்டு நாட்டை பராக்கிரமயுகத்துக்கு கொண்டு வரவுள்ளார்என்றுரணில்கூறினார். ஆனால் நூற்றாண்டுகள் கடந்த மன்னராட்சி சிந்தனைகளே தற்போதும் உள்ளன. ஆகவே எமக்குஅரசியல்ரீதியானசவால்கள் காணப்பட்டாலும் அனுபங்கள் உள்ளன. அவற்றின் ஊடாக சாவால்களை வெற்றி கண்டு நாம் இலட்சிய இலக்கை அடைவோம் என்றார்.

### மீனவர் பிரச்சினை தொடர்பில்

# பேச்சு நடத்த வருமாறு இந்தியாவிற்கு அழைப்பு

உக்கிரமடைந்துள்ள மீனவர் பிரச்சினைதொடர்பில்கலந்துரையாட முன்வருமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதி பதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

"மீனவர்கள் பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. இது சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு இந்தியாவிடம் நேரம்கோரியுள்ளது. அதற்காக இந்தியாவின் பதிலை எதிர்பார்த்துள்ளது. அதன் பின்னர் மீனவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

கடற்றொழில் அமைச்சு இந்த பேச்சில் ஈடுபடவுள்ளதோடு தேவை ஏற்பட்டால்வெளிவிவகாரஅமைச்சும் அப்பேச்சில் பங்கேற்கும்" என்றார் அவர்.

## சுதந்திரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யால் தெரிவுச் செயற்பாடுகள் பிற்போடப்பட்டுள்ளன.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கலைக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர மகளிர் முன்னணிக்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கு இன்று (நேற்று) காலை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுகூடினர்.

கட்சியின் தவிசாளர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது. கட்சியின் மகளிர் முன்னணிக்கான புதிய நிர்வாக சபையின் உயர் பதவிகளுக்காக சிலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், அவர்களுடன் கலந்துரையாடிஅடுத்தகட்டநடவடிக்கையை எடுப்பதற்குக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்தார். இதற்கமைய, புதிய உறுப்பினர் சபையை தெரிவு செய்யும் நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுவதாக அறிவித்தார் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் சிறந்த 10 பாடசாலைகளில் வடக்கில் மூன்று பாடசாலைகள் தெரிவு

இலங்கையின் சிறந்த 10 பாடசாலைகளில் வடக்கில் இருந்து மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் தேசிய பாடசாலையான வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் திறைசேரியின் அங்கீகாரத்துடன் இலங்கையில் சிறந்த 10 பாடசாலைகளில் ஒன்றாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த தரம் உயர்வின் மூலம் பாடசாலையின் அதிபராக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு சமனான எஸ்.எல.ஈ.எஸ். தரம் ஒன்று உத்தியோகத்தர் காணப்படுவதோடுஇ பிரதி அதிபர்களாக மூவர் எஸ்.எல்.ஈ.எஸ். தரம் மூன்று உத்தியோகத்தர்களும் கடமையாற்றுவார்கள்.

வடமாகாணத்திலேயே பிரதி அதிபர் பதவிக்கு மூன்று எஸ்.எல்.ஈ.எஸ். உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளமை இப் பாடசாலைக்கு மட்டுமே ஆகும்.

அத்துடன்இ வடக்கின் யாழ்.மாவட்டத்தில் இருந்து வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இந்துக் கல்லூரி என்பனவும் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன. இந்த தரம் உயர்வின் மூலம் பாடசாலையின் அதிபராக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு சமனான எஸ்.எல்.ஈ.எஸ். தரம் ஒன்று உத்தியோகத்தர் காணப்படுவதோடுஇ பிரதி அதிபர்களாக இருவர் எஸ்.எல்.ஈ.எஸ். தரம் மூன்று உத்தியோகத்தர்களும் கடமையாற்றுவார்கள்.

(05 - 100)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் கற்றலில் ஒதுங்கி இருக்கும் தீர்மானத்தை கைவிட்டனர்

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் வரவு பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாக கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் வியாழன் முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் குறித்த போராட்டம் கைவிடப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்இ இன்று எம்மால் முன்னெடுக்கப்பட்ட கல்விப் புறக்கணிப்பு போராட்டத்தைத் தற்காலிகமாக முடிவுக்குக்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் கீழ்க்காணும் முறைப்பாடுகளை ஆதாரபூர்வமாக விஞ்ஞான பீட நிர்வாகத்துக்கு நிஷரூபித்துள்ளோம்.

1.அநேகமான இரசாயனவியல் துறை மாணவர்கள் மருத்துவச் சான்றிதழ்கள் இன்றி அதிகளவு விடுமுறைகளில் இருந்தும் மன்னிப்பு அடிப்படையில் பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2.விரிவுரைகள் நடத்தப்பட்ட பாடவேளைகள்இ நியமமாக நடத்தப்பட வேண்டிய மணித்தியாலங்களை விட குறைவாகக் காணப்படுகின்றமை.

3.கற்பிக்கப்படாத பாட வேளைகளுக்கு வரவு கவனத்தில் எடுக்கப்பட்டமை.

மேற்குறிப்பிடப்பட்ட தவறுகள் நிர்வாகத்தரப்பிடம் இருந்தும் மாணவர்களின் வரவுகளை வைத்து பல மாணவர்களை பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதி மறுக்கப்பட்டமை மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி ஆகும்.

எனவே இம்முறை பரீட்சைக்கு வரவுகள் கவனத்தில் எடுக்கப்படாமல் அனைத்து மாணவர்களையும் முதல் தவணை பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதிக்குமாறு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் சார்பாகத் தெளிவாகத் தெரிவிகின்றோம்.

தவறும்பட்சத்தில் விஞ்ஞானபீட நிர்வாகத்திற்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்பதையும் அறித்தருகின்றோம். - என்றுள்ளது.

(05)

## அச்செழுவில் வாள்வெட்டு





யாழ்ப்பாணம் - நீர்வேலி அம்மன் கோவில் சாந்தி அச்செழு பகுதியில் வியாழக்கிழமை இரவு வீட்டுக்குள் புகுந்த வன்முறை கும்பல் சொத்துக்களை அடித்துடைத்து சேதம் விளைவித்ததுடன் வீட்டிலிருந்து இருவர் மீதும் வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் வீட்டின் குடும்ப தலைவர் மற்றும் அவரது சகோதரர் பலத்த வாள்வெட்டு காயங்களுக்கு உள்ளாகி கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

44 வயதுடைய முருகையா மோகனதாஸ்இ 45 வயதுடைய முருகையா ஜெயமோகன் ஆகிய இருவர் மீதே வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10 மணி அளவில் வீட்டுக்குள் புகுந்த 20 பேர் கொண்ட கும்பல்இ கூரிய ஆயுதங்கள் மூலம் கதவை உடைத்து உள்ளே புகுந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன்இ வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை அபகரித்து சென்றுஇ பிரதான வீதியில் வைத்து தீ மூட்டி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சந்தேகத்தில் வெள்ளிக்கிழமை இளைஞன் ஒருவர் கைது செய்யபட்டுள்ளார்.

(05)

## ஓடும் தனியார் பஸ்ஸிலிருந்து வீழ்ந்து நல்லூரில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் தனியார் பஸ்ஸில் இருந்து வீழ்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பணியாறறும் முல்லைத்தீவு ஒட்டிசுட்டானைச் சேர்ந்த ஏ.நிஷாந்தன் என்ற 29 வயதான இளைஞனே உயிரிழந்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக வெள்ளிக்கிழமை காலை விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. தனியார் பஸ் நல்லூர் முன்பாக வீதியில் திரும்பும்போது பஸ்ஸிலிருந்து நிஷாந்தன் முதுகுப்புறமாக வீழ்வது மறைகாணி (சிசிரிவி) பதிவுகளில் காணப்படுகின்றது. (05)

## சம்பியனானது யுனைடெட் அணி





(மூதூர் நிருபர்)

48 ஆவது மூதூர் பிரதேச விளையாட்டு விழாவில் , வெலிபோல் விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை மூதூர் தாகா நகர் விளையாட்டு மைதானதில் இடம்பெற்றது..இதில் யுனைட்டெட் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி சம்பியனாகத்தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு எதிர்த்துப்போட்டியிட்ட பாரதி விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளது.இதில் 8 விளையாட்டுக்கழகங்களைச் சேர்த அணியினர் பங்குபற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(05)

## வவுனியாவில் மேழி 70 விழா!

*கலாநிதி மேழிக் குமரனின் எழுபது அகவையையும் ஐம்பதாண்டு இலக்கிய பயணத்தையும் முன்னிட்டு இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.*

*வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர் தமிழருவி த.சிவகுமாரனின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் த.மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்,கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா மற்றும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை பீடாதிபதி க.பேர்ணாட், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந.சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.*

*இந்த விழாவில் எழுத்தாளர் மேழிக்குமரனின் கொள்ளிக்காசு சிறுகதைத் தொகுப்பு நூலும் 'அல்சைமர்' மருத்துவ நூலும் வெளியீடு செயப்படவிருக்கின்றன.*

*மேழிக்குமரனின் 50 ஆண்டுகால தமிழ் இலக்கியப் பணியும் அவரது எழுபதாவது அகவை தினமும் இவ்விழாவின் சிறப்பம்சங்களாகும். (05)*

## யாழ்ப்பாணம்- கன்னாதிப்டி காளி அம்பாள் தேர்த் திருவிழாவில் இரு பெண்கள் கைது

*கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றபோது பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்தனர். இதனை சாதகமாகப் பயன்படுத்தி நகைத் திருட்டில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் கொழும்பு கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.*

*யாழ்ப்பாண பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடம் இருந்து நான்கரை பவுண் தாலி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.*

*விசாரணைகளின் பின்னர் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை

**அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது உரைகளில் நாட்டின் எதிர்காலம் குறித்தும் சரிந்து கிடக்கும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவது குறித்தும் அதிகளவில் பேசுகின்றார். அவர் மட்டுமல்ல அவரது ஆளும் தரப்பைச் சேர்ந்த அமைச்சர்களும் அப்படியே அவர்களும் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றார்கள். ஆனால் அவை நடைமுறைக்கு வருவதற்கு பெரும் கால தாமதங்கள் ஏற்படுகின்றன என்பதுதான் உண்மை.**

**இந்த மாசி மாதத்தில் நடக்கும் என்று ஆளும் தரப்பில் அறிவிக்கப்பட்ட இரு விடயங்களை அதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். முதலாவது மாசி மாத நடுப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி கிடைக்கும் என்று ஆளும் தரப்பால் பெருமெடுப்பில் பரப்புரை செய்யப்பட்டது. நாணய நிதியத்தின் முதல் கட்ட நிதி தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு அதன் வல்லுநர்கள் குழு இலங்கைக்கு வருவதற்கு முன்பாக தை மாதமே இந்த இரண்டாம் கட்ட நிதி கிடைக்கும் என்று ஆளும் தரப்பில் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் மீளாய்வுக் குழு வந்து சென்ற பின்னர் மாசி நடுப்பகுதியில் நிதி கிடைத்துவிடும் என்று சொல்லப்பட்டது.**

**நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி கிடைத்ததும் இலங்கை அதன் படுகடனை அடைக்க முடியாத நிலையிலிருந்து மீண்டு விடும் என்று, அதாவது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிடும் என்று ஆளும் தரப்பினர் மீண்டும் மீண்டும் சொல்லி வந்தனர். மாசி மாதம் முடிவதற்கு இன்னும் 4 நாட்களே இருக்கும் நிலையிலும் அதற்கான எந்த அறிகுறிகளையும் காணவில்லை. நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி தொடர்பில் ஆளும் தரப்பினர் இப்போதெல்லாம் வாயே திறப்பதில்லை.**

**நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி கிடைக்கவேண்டுமானால் இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற நிபந்தனையுண்டு. அது நிறைவேறாமல் நாணய நிதியத்தின் அடுத்த கட்ட நிதிக் கொடுப்பனவு, அதாவது இலங்கையைப்பிணையெடுப்பது சாத்தியமில்லை. நாணய நிதியத்தின் நிதி இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றால், கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் முழுமையடையவில்லை என்றே அர்த்தப்படுகின்றன. இந்தக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2023 ஐப்பசி மாதத்திற்குள் முடிந்துவிடும் என்று ஆளும் தரப்பு சொல்லி வந்தது. ஆனால் இன்றுவரை அவற்றில் எதுவும் நடக்கவில்லை என்று தெரிகின்றது.**

**இரண்டாவது விடயம் மின்சாரக் கட்டணக் குறைப்பு. கட்டணங்களை அள்ளுகொள்ளையாக அதிகரித்தபோது, 6 மாதங்களுக்கு ஒரு தடவை அது மீளாய்வு செய்யப்படும் என்று மின் மற்றும் சக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர வக்கனையாக மீண்டும் மீண்டும் அறிவித்தார். அதன்படி 2024 தை மாதமே கட்டண மறுசீரமைப்பு இடம்பெறும் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்தார். தை மாதம் வந்ததும் கட்டணக் குறைப்புக் குறித்து பல்வேறு கேள்விகளும் அழுத்தங்களும் எழுந்தபோது மாசி மாதத்தில் கட்டாயம் கட்டணக் குறைப்பு இடம்பெறும் என்றார். ஆனால் மாசி மாதம் முடிவதற்கு இன்னும் 4 நாட்களே இருக்கும்போதும் கட்டணக் குறைப்புக்கான எந்த அறிகுறியும் இல்லை.**

**மின்சாரக் கட்டணங்கள் 18 சதவீதத்தால் குறையும் என்று அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால், அது எப்போது நடைமுறைக்கு வரும் என்று அவர் தெரிவிக்கவில்லை. அப்படியே அவர் தெரிவித்தாலும் அதன்படி நடக்கப்போவதில்லை என்பதும் உறுதி.**

**இப்படி அரசு முந்திக்கொண்டு ஒவ்வொன்றையும் குதிரை வேகத்தில் அறிவித்தாலும் அவை நடப்பதென்னவோ ஆமை வேகத்திலேயே இருக்கின்றன. ஆளும் தரப்பின் இந்தக் கையாலாகாத் தனத்தால் மக்களே அதிகம் துன்பப்படவேண்டியுள்ளது.**

# ஒளி மாசு பற்றி உணர்வோம்

**ஜெயராஜசேகர்**

இரவில் வானத்தையும் நிலவையும் நட்சத்திரங்களையும் இரசிப்பது நம்மில் பெரும்பாலானோருக்கு மகிழ்ச்சி தரும். இரவின் இருளில் மின்மினிப் பூச்சிகளின் இயக்கத்தை கண்டவர்கள் அந்தக் காட்சிகளை




மறந்திருக்கமாட்டார்கள். கிராமப்புறங்களில் இந்த நிகழ்வுகளை ஒரு சிலர் அனுபவித்தாலும் நகர்ப்புறங்களில் இந்த அனுபவம் அரிதாகி வருகிறது. சுற்றுச்சூழலில் செயற்கை ஒளியின் ஆதிக்கம் அதிகரித்திருப்பது இதற்கு முக்கிய காரணம்.

இயற்கையின் அற்புதங்களை கவனிப்பதற்கும் இரசிப்பதற்கும் நம்மைக் கட்டுப்படுத்தும் இந்த செயற்கை ஒளியின் செறிவு இந்தப் பூமியில் வாழும் உயிரினங்களின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. செயற்கை ஒளி மூலங்களின் அதிகப்படியான பொருத்தமற்ற ஒளியின் காரணமாக ஒளி மாசுபாடு ஏற்படுகிறது. நகர்ப்புறங்களில் வானத்தில் உண்டாகும் ஒளிர்வு, வரம்பு மீறிய ஒளி, கண் கூசும் வெளிச்சம், செங்குத்தான வெளிச்சம், ஒழுங்கீனமான ஒளி பரவல் ஆகிய ஐந்து காரணிகள் ஒளி மூலங்களின் ஒளிர்வினையைத் தீர்மானிக்கின்றன.

வழிகாட்டிவிளக்கு, தெருவிளக்குகளின் மோசமான அமைவிடம், அதிக மக்கள் தொகை, சாலைகளில் வாகன போக்குவரத்து அடர்த்தி ஆகியவை ஒளி மாசுபாடு ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில சமயங்களில் புகை, மூடுபனி, அதிக அளவிலான மாசு துகள்கள் போன்ற சில சுற்றுச்சூழல் காரணிகள் ஒளி மாசுபாட்டின் தீவிரத்தை அதிகரிக்கின்றன. ஒளி மாசுபாடு பூமியில் வாழும் உயிரினங்களின் உயிரியல் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதுடன் அவற்றின் அன்றாடப் பணிகளுக்கான நேரத்திலும் பாதிப்பு ஏற்படுத்துகிறது.

பூமியின் தினசரி சுழற்சியைச் சார்ந்துள்ள ஒளி உயிரினங்களின் இனப்பெருக்கம், தூக்கம், இடம்பெயர்வு போன்ற அன்றாடப் பணிகளை நிர்வகிக்கிறது. இரவில் ஏற்படுத்தப்படும் செயற்கை ஒளி இந்த அன்றாடப் பணிகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஒளியின் அளவு, தரம், காலம் ஆகிய மூன்று பண்புகளால் தாவரங்கள் பாதிக்கப்படுகின்றன. ஒளியின் மொத்த செறிவு அல்லது தீவிரத்தை அளவு என்றும் ஒளியின் அலைநீளத்தை தரம் என்றும் ஒளிரும் நேரத்தை காலம் என்றும் வல்லுநர்கள் கூறுகின்றனர்.



ஒளி மாசுபாடு இந்த மூன்று பண்புகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை மாற்றும் திறன் கொண்டது. தாவரங்களில் நிறமி உருவாக்கம், இலை உதிர்தல், மொட்டு உருவாதல், மலர்தல் போன்ற பல உயிரியல்செயல்பாடுகளைஒளிக்கதிர்தீர்மானிக்கிறது. இயற்கை ஒளி காலத்தை மாற்றும் செயற்கை ஒளி, தாவரத்தின் வளர்ச்சியை சீர்குலைக்கிறது. ஒளியின் உணர்திறன் அடிப்படையில் நீள்பகல் தாவரங்கள், குறும்பகல் தாவரங்கள், பகல்சாராத தாவரங்கள் என தாவரங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. ஒளி மாசுபாடு இந்த தாவரங்களின் ஒளிக்காலப்பேறினை (போட்டோபிரியடிசம்) கட்டுப்படுத்துவதன் வழி இத்தாவரங்களை பாதிக்கிறது.

இரவில் பூக்கும் கற்றாழை போன்ற பல தாவரங்களின் மகரந்தச் சேர்க்கை, இனப்பெருக்கம் இரவு நேரங்களில் வெளிச்சத்தை அதிகரிப்பதால் தடைபடும். பகல் ஒளியின் காலம் அளவைப் பொறுத்து பெரும்பாலான விலங்குகள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை செயல்படுத்தும். அந்தி அரை ஒளி சார்ந்த (க்ரெபஸ்குலர்) விலங்குகள் மற்றும் இரவுயிரி (நோக்ட்டர்னல்) விலங்குகள் ஒளி மாசுபாட்டால் பாதிக்கப்படுகின்றன.

செயற்கை ஒளியின் வெளிப்பாடு உணவு மற்றும் துணையைகாண்பதற்கானவாய்ப்புகளைகுறைக்கும் அதேவேளை வேட்டையாடும் செயல்பாடுகளை அதிகப்படுத்துவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். ஒளி மாசுபாடு காரணமாக அனைத்து உயிரினங்களும் பாதிக்கக்கூடும் என்றாலும் அதன் விளைவுகள் நீர்நில வாழ்வன, கடல் ஆமைகள், புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் பூச்சி இனங்கள் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்கின்றனர் வல்லுநர்கள்.

இரவில் உண்டாகும் செயற்கை ஒளி, உலகளவில் பூச்சிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கான ஒரு முக்கிய காரணமாகும். சுற்றுப்புற ஒளியை உணரும் திறன் கொண்ட நீர் நில வாழ்வன இரவில் மட்டும் இனச்சேர்க்கை அழைப்புகள் விடுக்கின்றன. இந்த செயல்முறைக்கு இடையூறு விளைவிக்கும் செயற்கை ஒளி இந்த உயிரினங்களின் இனப்பெருக்கத்தைப் பாதிக்கிறது.

கடல் ஆமைகள் கடற்கரையில் இடும் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்த பின் அந்தக் குஞ்சுகள் கடலுக்கு மேல் உள்ள பிரகாசமான அடிவான ஒளியை நோக்கி கடலுக்குள் செல்கின்றன. கடற்கரைகளில் உள்ள செயற்கை விளக்குகள் அவற்றை தவறான திசையில் வழிநடத்துகின்றன. இரவு நேரப் பறவைகள் உணவு தேடுவதற்கும் வேட்டையாடுவதற்கும் நிலவொளியையும் நட்சத்திரங்களின் ஒளியையும் பயன்படுத்துகின்றன.

இந்தப் பறவைகள் அதிக செறிவு கொண்ட செயற்கை ஒளியால் திசைதிருப்பப்படுகின்றன. பிரகாசமாக ஒளிரும் உயரமான கட்டடங்கள், கலங்கரை விளக்கங்கள், காற்றுச் சுழலிகள், கடல் சார்ந்த எண்ணெய்க் கிணறு துளையிடும் தளங்களில் மோதுவதால் ஏராளமான பறவைகள் இறப்பது வாடிக்கையாகிவிட்டது. செயற்கை ஒளி, மனிதர்களுக்கு தூக்கக் கலக்கத்தை ஏற்படுத்துகிறது. அனைத்து உயிரினங்களின் பகல் மற்றும் இரவு நேர உடலியல் செயல்முறைகளை செயல்படுத்தும் உள்ளுடல் கடிகாரத்தின் (சர்க்காடியன் க்ளாக்) 24 மணி நேர சுழற்சி நடைமுறைகளை செயற்கை ஒளி பாதிக்கிறது.

மூளை அலை வடிவங்கள், ஹார்மோன் உருவாக்கம் மற்றும் செல் ஒழுங்குமுறை போன்ற உடலியல் செயல்முறைகளை தீர்மானிக்கும் உள்ளுடல் கடிகாரத்தில் ஏற்படும் இடையூறுக்கும் மனச்சோர்வு, தூக்கமின்மை, இருதய நோய் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் தொடர்பிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. தேவைப்படும் இடங்களில் மட்டுமே ஒளியைப் பயன்படுத்த அசைவுணரி (மோஷன் சென்சார்) அடிப்படையில் விளக்குகளை நிறுவுதல் வேண்டும். கண்களில் கூச்சத்தை ஏற்படுத்தும் ஒளி அத்துமீறலைக் குறைக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த பறவைகளுக்கான பாதைகள் மற்றும் ஆமை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் கடற்கரை போன்ற சூழலியல் ரீதியாக ஒளி உணர் திறன் உள்ள பகுதிகளில் செயற்கை ஒளியை குறைக்க வேண்டும். நெடுஞ்சாலைகள் மற்றும் வனப் பகுதிகளுக்கு அருகில் உள்ள சாலைகளில் வாகன விளக்குகள் பயன்பாடு குறித்த முறையான வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்த வேண்டும். மக்களிடம் ஒளி மாசுபாடு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக காவடி தீ மிதிப்பு









(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாத்தளை பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவ காவடி தீ மிதிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வரலாறு காணாத பெரும் திரளான பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதி-களிலுமிருந்து கலந்து கொண்டனர். (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சைவவித்தியா விருத்தி சங்க நூற்றாண்டு விழா நிகழ்வுகள்







சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் தற்போது யாழ்ப்பாணம்- நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

காலை 9 மணி தொடக்கம் 12.45 மணி வரை முதலாவது அமர்வும் இ மதியம் 2.30 மணி தொடக்கம் 4.50 மணிவரை இரண்டாவது அமர்வாகவும் இந்த நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

நிகழ்வில் கடவுள் வாழ்த்துஇ மங்கல இசைஇ நடனம் இ வில்லுப்பாட்டு உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றது.

நூற்றாண்டு விழாவில் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் இ சிவகுரு ஆதீன குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் இ பேராசிரியர்கள் இ விரிவுரையாளர்கள் இ மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## 50 நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனவரி மாதம் ஜாஎலையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தை விடப் பன்மடங்கு மக்கள் தொகையுடன் இன்று கொழும்பில் எமது முதலாவது கூட்டத்தை தொடக்கியுள்ளோம். இன்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட மட்டக்களப்பின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் என்னுடன் இணைத்துள்ளனர்.

தற்போது சில அரசியல் கட்சிகள் தமக்குப் போட்டியாக அரசியலில் வேறு எந்த பலமும் இல்லை என்று எண்ணிக்கொண்டிருக்கின்றன. அந்த எண்ணம் தவறானதாகும். அவ்வாறு எண்ணும் கட்சிகளுக்கு சவாலாகப் எமது புதிய கூட்டணியை நாம் உருவாக்கியிருக்கின்றோம்.

எமது கூட்டணி இளம் தலைமுறையினரின் நிலைப்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இடைமளிக்கும் கூட்டணியாக அமைந்துள்ளது. வெற்றிக்கான கூட்டணியை அமைப்பதற்கு பலப் ஆண்டுகள் தேவையில்லை. ஆறு மாத காலத்துக்குள் வெற்றியை நோக்கிய பயணத்தை இலக்காகக் கொண்டு எமது கூட்டணி கட்டியெழுப்பப் பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் எவ்வாறான நிலைமை காணப்பட்டது என்பதைச் சகலரும் அறிவார்கள். அன்று இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை சில அரசியல் சக்திகள் தமது சந்தர்ப்பவாத அரசியலுக்காக பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தன.

அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி அலுவலகமும் பிரதமர் அலுவலகமும் கைப்பற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தை முற்றுகை இடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அந்த முயற்சி தடுக்கப்பட்டது. அதன் காரணமாகவே இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. இல்லை என்றால் இன்று ஜனநாயகம் கேள்விக்குறிக்குள்ளாகியிருக்கும்.

2009ஆம் ஆண்டு பிரபாகரனின் போர் நிறைவடைந்தது. ஆனால், அதன் பின்னர் பொருளாதாரப் போர் தொடங்கியது. அந்தப் போர் இன்றும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. எனவே எமது புதிய கூட்டணியின் இலக்கு பொருளாதாரப் போரை நிறைவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியடைச் செய்வதாகும்.

2022ஆம் ஆண்டு மே மாதம் நான் எனது அமைச்சை பொறுப்பேற்கும்போது பாடசாலைப் புத்தகங்களையோ சீருடைகளையோ வழங்க முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனால், இன்று முதலாம் தவணை தொடங்கிய உடனே எம்மால் பாடபுத்தகங்களை விநியோகிக்க முடிந்துள்ளதோடு சீருடைகளையும் வழங்க முடிந்துள்ளது.

தற்போது தொழில் இன்றி உள்ள புதிய பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்க தயாராக உள்ளோம். கடந்த 75 ஆண்டுகளாக ஏமாந்தது போதும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். எனவே மக்கள் மாற்றத்தையும் புதுமையையும் எதிர்பார்க்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் எமது புதிய கூட்டணி செயல்படும்.

அதற்கமைய எமது அடுத்த கூட்டம் இதனை விட பன்மடங்கு மக்கள் தொகையுடன் முன்னெடுக்கப்படும். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் எம்முடன் இணைய தயாராகவுள்ளனர். தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பேசப்படுகின்றது. அரசமைப்புக்கு அமைய ஒக்டோபர் 17 நாளுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும். அந்த இரு தேர்தல்களும் குறிப்பிட்ட தினத்தில் இடம்பெறும். குறித்த உத்தேச தேர்தல்களில் எமது புதிய கூட்டணி பெரும் வெற்றி பெறும் என்று நம்புகின்றோம். அந்த வெற்றிப் பயணத்துக்கான நடவடிக்கைகளையே நாம் இன்று ஆரம்பித்துள்ளோம். கற்பனை கதைகளால் மாத்திரம் எதையும் செய்துவிட முடியாது. எனவே, வார்த்தைகளால் மாத்திரமின்றி செயற்பாடுகளாலும் நாம் எமது வெற்றியை நிரூபித்து காட்டுவோம் என்றார்.




# யங் பேஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புடன் ஜம்இய்யதுல் உலமா சபை விசேட சந்திப்பு



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை யங் பேஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கும் கல்முனை அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத் ஜம்இய்யதுல் உலமா சபையினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை மாலை ஜனாஸா நலன்புரி அமைப்பின் கல்முனை அலுவலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை யங் பேஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் இவ் உயரிய சேவைக்கு ஆதரவு வழங்கி, ஊக்குவிக்கும் நோக்கில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, ஜனாஸா நலன்புரி சேவை வாகன கொள்வனவுக்கான ஒரு தொகை நிதி கல்முனை அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத் ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் மௌலவி பி.எம்.ஏ.ஜெலீல், செயலாளர் மௌலவி ஏ.எல்.எம். நாஸர் உள்ளிட்ட உயர்பீடத்தினரால் ஜனாஸா நலன்புரி அமைப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

கல்முனை யங் பேஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் எம்எம்மர்சூக் தலைமையில், செயலாளர் எம்.வை.பாயிஸ், பொருளாளர் எம். எச்.எம்.நியாஸ், உப பொருளாளர் எம்.இக்றாம், உப தலைவர்களான எஸ்.அஷ்ரப்கான், முஹம்மட் ஹில்மி, முகாமையாளர் ஏ.வி.எம். அர்ஷாத், கணக்குப் பரிசோதகர் ஏ.சி.எம்.பௌஸர் ஆகியோருடன் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு தலைவர் மௌலவி பி.எம்.ஏ.ஜெலீல் உரையாற்றும்போது -

இஹ்லாசான எண்ணத்துடன் எமது இந்த சேவையை செய்து வருகின்றபோது சகல தேவைகளையும் இறைவன் பூரணமாக்கி தருவான். சமூகத்திலுள்ள சகல தரப்பினரும் இந்த உயரிய பணிக்காக உதவ முன்வர வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் இணைந்து எமது ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தானாக முன்வந்து உதவுவதற்குத் தயாராக வேண்டும். இது அழ்ழாஹ்வால் மிகவும் விரும்பத்தக்க பணியாகும். இதற்காக கால நேரங்களை ஒதுக்கி செயற்படுகின்ற அனைத்து நபர்களுக்கும் இறைவனின் நற்கூலி நிச்சயமாகக் கிடைக்கும். இதன் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஊரிலுள்ள சகல தரப்பினரும் கொள்கை பேதங்களை மறந்து உதவுவதற்கு முன்வரவேண்டும். - என்றார்.

இந்த ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு இருக்கின்ற தேவைகளை நிவர்த்தி செய்ய எங்களுடைய உலமா சபை முழு பங்களிப்பையும் ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்குவதற்கு என்றும் தயாராக இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார். (05)

# சம்மாந்துறை பிரதேச செயலக ஒன்றுகூடலும், கௌரவிப்பும்!







(எஸ்.அஷ்ரப்கான்,சர்ஜ/ன் லாபீர், ஐ.எல்.எம்.நாஸீம்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட அறுவடை - 2023 ஆம் ஆண்டிற்கான ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களைக் கௌரவித்து நினைவு சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த),(உ/த) பரீட்சைகளில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ்,பிரதம கணக்காளர் ஏ.எல். ஆதம்பாவா,பிரதம பொறியியலாளர் ஏ.பி. சாஹீர்,மாவட்ட உள்ளக பிரதம கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதி,உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள்,கணக்காளர்கள் சம்மாந்துறைபிரதேசதிணைக்களங்களின் தலைவர்கள் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உத்தியோகத்தர்களின் கலை கலாச்சார நிகழ்வுகளும் அரங்கேரப்பட்டதுடன்,போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசீல்களும் வழங்கப்பட்டது. (05)

# வாழவைத்தகுளம் பிரதேச தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வியாபார தள்ளு வண்டிகள்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் குவைத் நாட்டின் நிதி பங்களிப்பில் அல்- ஹிமா நிறுவனத்தின் அனுசரணையில் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு சக்கர வியாபாரத் தள்ளுவண்டிகள் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பயனாளிகளுக்கு அண்மையில் வாழவைத்தகுளம் அல்-பதாலாஹ் கல்வி வளாகத்தில் வைத்து இராஜாங்க அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டன.

(05)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம்



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை சின்னப்பள்ளி வட்டாரம் 10 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், மத்திய குழுவின் செயலாளர் எம்.எஸ்.எம். அஸாறுடீன், சின்னப்பள்ளி வட்டார வேட்பாளர் ஏ.எல்.எம்.நிப்றாஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

(05)

# தகவல் தெரிந்தால் உடன் அறியத்தருக



(கே எ ஹமீட்)

கல்முனையைசேர்ந்த ஆ.ஐ. உதுமா லெப்பே என்பவர் கொழும்பு மருதானையில் காணாமல் போய் உள்ளார் - இவர்பற்றி தகவல் தெரிந்தவர்கள் அறிவிக்கவும்.

கல்முனையை பிறப்பிடமாகக் கொண்ட ஆ.ஐ. உதுமாலெப்பை என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியில் இருந்து கொழும்பு - மருதானை கே.எல்.ஐ லொட்ஜில் வைத்து காணாமல் போயுள்ளார். இவரை யாரேனும் கண்டால் உடனடியாக பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தாருங்கள் 0775728170 - 0754189110

காணாமல் போனபோது வெள்ளை சாரம், லைட் கிரீன் கலர் சேட் மற்றும் தொப்பி அணிந்து இருந்தார். (05)

# கல்முனை வலயத்தில் முதலிடம் பெற்ற கார்மேல் பற்றிமாவுக்கு நற்சான்றிதழ்

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை வலயத்தில் கடந்த க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் அதிகூடிய சித்தி வீதத்தை பெற்று முதலிடத்தில் சாதனை படைத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரிக்கு சிறப்பு நற்சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

அச்சான்றிதழை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹதுல் நஜீம் பற்றிமா கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்டுக்கு வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வு கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் இடம் பெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் கடந்த வருடம் 2022(2023) இடம்பெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேற்றில் குறித்த பாடசாலை கல்முனை வலயத்தில் அதிகூடிய சித்தி வீதத்தைப் பெற்றதைப் பாராட்டும் வகையில் வலயக்கல்விப்பணிப்பாளரால் நற்சான்றிதழ் வழங்கிவைக்கப்பட்டது.

அதனையொட்டி பாடசாலை சமூகம் இவ்வெற்றிக்குப் பங்களிப்புச்செய்த அதிபர்,பிரதி அதிபர்கள்,உப அதிபர்கள், பகுதித்தலைவர்கள்,வகுப்பாசிரியர்கள் ,பாட ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது என பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

(05)

# கத்தாரில் நடைபெறவிருக்கும் உலக அளவிலான இணைய மாநாட்டில் இலங்கை ஊடகவியலாளர்






(எஸ்.அஷ்ரப்கான், ஏ.எம். அஜாத்கான்)

உலகின் மிகப் பெரிய இணைய தொழில்நுட்ப மாநாடான 'வலை உச்சி மாநாடு' இவ்வருடம் கத்தாரில் தோஹா கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் முதன் முறையாக இலங்கையர் என்ற வகையில் ஊடகவியலாளர் ஜே.எம். பாஸித் கலந்துகொள்ள உள்ளார்.

மேலும் இம்மாநாட்டில் கத்தார் நாட்டின் பிரதமர், விண்வெளிக்குச் சென்ற முதல் அரபுப் பெண்மணி சாரா சப்ரி, டிக்டோக் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பிரபல ஃபேஸ்புக் தளமான மெட்டா நிறுவனத்தின் பிரதிநிதிகள், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் பாலிவுட் நடிகை நோரா ஃபதேஹி என உலக அளவில் முன்னிலையில் உள்ள பிரதிநிதிகளும் 12,000இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களும் 80 நாடுகளுக்கும் மேற்பட்ட 1,000 புதிய தொழில் முனைவோர்களும்

சமீபத்திய இணைய தொழில்நுட்பம் பற்றி விவாதிக்க ஆயிரக்கணக்கான தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள தொழில்நுட்பத் தலைவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (05)

# உலக சாதனை வீரனுக்கு ஊர் ஒன்றுகூடி கௌரவிப்பு



(அபு அலா)

சர்வதேசம் சென்று 'சோழன் உலக சாதனை' நிகழ்வில் புலன் உறுப்புகள் மற்றும் உடல் பாகங்களால் சாகசம் செய்து சாதனை நிகழ்த்திய சாய்ந்தமருது பர்ஷானுக்கு ஊர் மக்கள் ஒன்றுகூடி கௌரவித்த வரலாற்று விழா கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின்னர் சாய்ந்தமருது முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அண்மையில் இந்தியா - தஞ்சாவூரில் 'சோழன் உலக சாதனை' நிகழ்வு இடம்பெற்றது. இதில் சாய்ந்தமருதைச் சேர்ந்த பர்ஷான் கலந்து கொண்டு, பற்களால் தேங்காயை உறித்தும், மரப் பலகையை கைகளால் உடைத்தும், கண் இமையால் ஐந்து கிலோ எடையைத் தூக்கியும், குளிர்பானத்தை மூக்கால் அருந்தியும் உலக சாதனை படைத்துள்ளார்.

இவர் செய்த சாதனையைக் கௌரவிக்கும் முகமாக சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.எம். ஹிபத்துல் கரீம் வழிகாட்டலில் யூத் அலைன்ஸ் ஸ்ரீ லங்கா இளைஞர் அமைப்பின் ஒருங்கிணைப்பில் இந்தக் கௌரவிப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேர்தல் சீர்திருத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையார் ஏ.எல்.எம் சலீம், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் செயலாளர் எம்.எம்.மன்சூர், பொருளாளர் உஷாம் எம்.சலீம், சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம்.முபாறக், ஈஎவ்கியு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம்.நஸீர் உள்ளிட்ட ஊரின் பல பிரமுகர்கள் ஒன்றுகூடி சாதனையாளர் பர்ஷானுக்கு நினைவுச் சின்னம் மற்றும் பொன்னாடை போத்திக் கௌரவித்தனர்.

இதில் பர்ஷானுக்கு நல்லாசி வேண்டி பேஷ் இமாம் அல்-ஹாஜ் எம்.ஐ.ஆதம்பாவாவால் விசேட துஆப் பிரார்த்தனையும் நிகழ்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

# திறப்புவிழா

ஊரெழு கணேச வித்தியாசாலையின் புனரமைக்கப்பட்ட பிரதான மண்டப திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போது, பிரதம விருந்தினராக, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபால சுந்தரன் கலந்து கொண்டார்.

(05)





# கவிப் பூக்கள்!

## சிவந்த மலர்களும் சிந்தையை கலக்கும்...!

நீல வான ஓடையிலே
நீந்தும் சிவப்புத் தாரகைகள்
பசும்புல் தரையில் படுத்திடவே
பரவசமாயின பார்வைக்கு!

நீலப் பொய்கை தாலாட்ட
கோலம் போடும் பூ மரமோ
இன்பம் பொங்கும் எழிலாகும்!

அடடே! இதயம் கலங்குவதேன்?
மறக்க முடியா மனவடுவாம்
சிந்தை உறையும் செஞ்சோலை!

## மந்திரி வந்தார்...!

மந்திரி வந்தார்....
மந்திகள் சூழ!
'பதின்மூன்றை' பந்தாட
பதிவைத்த பொறியால்
வீங்கிய பள்ளிகள்...
மேலும் வீங்கவும்
வழிகள் பல கேட்டார்!
தேங்கும் சிறு பள்ளிகள்
ஏங்க வைத்து ஏகினார்..
அத்தனையும் அடக்கி
ஐந்து மணி அமரவைத்து
பொதிசோறு கதியாகத் தந்து!

-இரா.ஜெயக்குமார்

## உலகம்! கலகம்!! கலக்கம்!!!

வேட்டையினால் உயிர் பிடித்து
வெட்டைவெளி படுத்துறங்கி
நாட்டைக் கண்ட இனம்-படும்
பாட்டை என்ன சொல்ல?

ஆற்றங்கரை ஓரங்களில்
ஊற்றெடுத்த நாகரிகம்
ஆட்டம் காணுதின்று..!
அழிவுப் போர் பூணுதின்று!

தாயோடு பகைத்த உக்ரைன்
சேயொன்று சேர்க்கையினால்
உக்கிரப் போர் உருவெடுக்க
உருக்குலையும் தேசமாச்சு!

மூன்று பெரும் மதங்கள்
முகிழ்த்த புனித பலஸ்தீனம்
மூண்ட பெரும் யுத்தத்தில்
மாண்டு வரும் மழலைகளும்!

தாய்வான் தவளை கத்த
தாயென்று வாய்க்குள் போட
சீனப் பெரும் பாம்பு
சீறிப் பார்த்திருக்கும்...!

சூழ்ந்து வரும் சீனத்தை
சூடுகண்ட பூனை தேசம்
வீழ்த்த விழி பிதுங்கும்
உப கண்டம் தினம் கண்டம்!

கடல் கடந்து வேட்டையாடும்
கழுகு தேசம் திணறவென்றே
சோதனை மேல் சோதனையாய்
வாணம் விடும் வடகொரியா!

மூன்றாம் உலகப்போர்
மூளுமெனில் ஆளுதற்கு
ஆரும் தான் மிஞ்சுவாரோ?
வேரோடு விழும் மனிதம்..!

# தென்னமரவாடி கந்தசுவாமி மலை முருகன் ஆலயத்தில் பௌர்ணமி பொங்கலிப் பொலிஸார் தடை விதிப்பு

தென்னமரவடி கந்தசாமி மலை முருகன் ஆலயத்தில் மாதாந்த பௌர்ணமி தின பொங்கல் நிகழ்வில் ஈடுபட முயன்ற பொதுமக்கள் முப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவடி கிராமத்தில் உள்ள மிகப்பழைமையான கந்தசுவாமிமலை முருகன் ஆலயத்தில் மாதாந்தம் கிராம மக்களால் பௌர்ணமிதின பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் வெள்ளிக்கிமை குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெருகல், மூதூர், திருகோணமலையைச் சேர்ந்த 50 இற்கு மேற்பட்ட பொது மக்கள் வருகைதந்திருந்திருந்தனர். இதன்போது அப்பகுதியில் 400 இற்கு மேற்பட்ட பொலிஸார் மற்றும் முப்படையினர் குவிக்கப்பட்டு அப்பகுதிக்குள் நுழையவிடாது பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகைதந்த ஏஎச்ஆர்சி நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, சமூக செயற்பாட்டாளர் நவரெத்தினராசா அஞ்சலி, ஆலய தலைவர் வைரமுத்து விஜயநாயகம் உட்பட அகம் அமைப்பின் அங்கத்தவர்கள், எல்லா அங்கத்துவ தமிழ் தேசிய மக்களும் எனக் குறிப்பிட்டு புல்மோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரியால் தடையுத்தரவு வழங்கப்பட்டதுடன் ஏனைய பொதுமக்களும் தடுக்கப்பட்டனர்.

இதன்போது குறித்த இடம் பௌத்த விகாரைக்கு உரியது எனவும் இன்று நீதிமன்றத் தடை இருப்பதன் காரணமாக எவரையும் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்து பொதுமக்களை பொலிஸார் திருப்பி அனுப்பினர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சமூக ஆர்வலர் ஏ.கே.அமீரால் சீமெந்து பைகள் அன்பளிப்பு

(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை , அல்ஜென்னா பள்ளிவாசலின் புனர்நிர்மாணப் பணிகள் தற்சமயம் மேற்கொள்ள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த பணிகளை நிறைவு செய்யும் பொருட்டு பள்ளிவாசல் நிருவாகத்தினர் - தனவந்தர்கள், பிரமுகர்கள் என பலரது உதவிகளையும் பெற்றே குறித்த புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்றனர்.





அந்தவகையில் ஷாட்வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளருமான ஏ.கே. அமீரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக ஒரு தொகை சீமெந்து பக்கெட்டுகள் கடந்த வாரம் வழங்கிவைக்கப்பட்டன.

மேலும் குறித்த பள்ளிவாசலின் கோரிக்கையினை பூர்த்தி செய்வதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்வதுடன், அதற்கான ஒத்துழைப்புகளையும் பெறவுள்ளதாக அவர் கருத்து தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்திற்கு முன்னர் பள்ளிவாசலின் புனர்நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு தங்களால் முடிந்த உதவி, ஒத்தாசைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (05)

# வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் போன் திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பழைய பஸ் நிலையப் பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான ஊடகநிறுவனம் ஒன்றில் சுமார் 3 லட்சம் ஷரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்று திருட்டுப் போயுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டையடுத்து தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக் கொடியின் வழிகாட்டலில், குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜயத்திலக தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் அகமட், பொலிஸ் சார்ஜன் திசாநாயக்கா, பொலிஸ் கொன்டபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது குறித்த கைத்தொலைபேசி நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மீட்டதுடன், குறித்த தொலைபேசியைத் திருடி விற்ற நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா, சகாயாமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபராவார். மீட்கப்பட்ட கைத்தொலைபேசியையும், கைது செய்யப்பட்ட நபரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# 30 கணித மற்றும் விஞ்ஞான மாணவர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவுடன் புலமைப்பரிசில்

(பாறுக் ஷிஹான்)

30 கணித விஞ்ஞான மாணவர்களுக்கு 5000 ஷரூபா கொடுப்பனவுடன் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை இவ்வருடம் முதல் அமுல்படுத்த உத்தேசித்துள்ளதாக கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நசீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் உள்ள கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் பிரதான அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இரவு விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு நட்புறவு ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு 30 வருட நிறைவை முன்னிட்டு 30 கணித விஞ்ஞான மாணவர்களுக்கு தலா 5000 ஷரூபா கொடுப்பனவுடன் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை இவ்வருடம் முதல் அமுல்படுத்த உத்தேசித்துள்ளோம்.

அதற்கான திட்டம் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இத்திட்டம் ஆரம்பமாகும்.இதில் ஸாஹிரா தேசிய பாடசாலை மஹ்மூத் பாலிகா பெண்கள் பாடசாலை மாணவர்கள் எவ்வித பாகுபாடும் இன்றி உள்வாங்கப்படுவார்கள்.இதை விட அடுத்த வருடங்களில் ஏனைய பாடசாலை மாணவர்களையும் உள்வாங்கத் தீர்மானித்துள்ளோம்.

காரைதீவு, நிந்தவூர், மருதமுனை ,கல்முனை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களும் எதிர்காலங்களில் இத்திட்டங்களில் உள்வாங்கப்படுவார்கள்.இதை விட அடுத்த திட்டமாக வயதான மற்றும் ஊனமுற்ற இளைஞர்களுக்கான உபகரணங்களை இவ்வருடத்தினுள் வழங்கத் தீர்மானித்துள்ளோம். இதில் 30 பேர் உள்வாங்கப்படுவார்கள். அடுத்த திட்டமாக 30 பேருக்கு இலவச நீர் இணைப்பும் 30 பேருக்கு மின்சார இணைப்பினையும் இவ்வருடம் பெற்றுக்கொடுக்கத் தீர்மானங்களை எடுத்திருக்கிறோம்.இத்திட்டம் 2 வருடத்திற்கு முன்னர் எமது அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டதுடன் 124 நீர் இணைப்பை இந்தத் திட்டத்தால் நிறைவு செய்து கொடுத்திருக்கின்றோம்.

இவ்விசேட செய்தியாளர் சந்திப்பில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நசீர், கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் பிரதி தவிசாளர் எம்.யுனைதீன் (மான்குட்டி) , நிதிப் பணிப்பாளர் முன்னாள் சாய்ந்தமது பிரதேச செயலாளர் ஏ.எல்.எ.சலீம், நிர்வாக பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம். பைசர் உள்ளிட்ட கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# கல்வி வள நிலையமாகிறது மயோன் முஸ்தபா இல்லம்

(அஸ்லம் எஸ். மௌலானா)

முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் சாய்ந்தமருது இல்லத்தை பொதுத் தேவைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை இரவு அவரது புதல்வரும் மயோன் குறூப் நிறுவனத்தின் தவிசாளருமான றிஸ்லி முஸ்தபா தலைமையில் நடைபெற்றது.



சமூகம் முன்னேற்றம் தொடர்பில் அதிக கரிசனையுடனும் தூரநோக்கு சிந்தனையுடனும் தனது பொருளாதாரத்தை அர்ப்பணிப்பு செய்து பல்வேறு சமூக நலத் திட்டங்களை இன, மத, பிரதேச பாகுபாடின்றி முன்னெடுத்திருந்த மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் உயரிய எண்ணங்களை நிறைவேற்றும் பொருட்டு, சாய்ந்தமருது மாவடி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தை, அன்னாரது விருப்பத்திற்கு அமைவாக பொதுத் தேவைகளுக்காக வக்பு செய்வதற்கு அவரது புதல்வர்களான றிஸ்லி முஸ்தபா, றம்லி முஸ்தபா, புதல்வியான றிஸ்னா முஸ்தபா, சகோதரரான கணக்காளர் எம்.எம். இப்றாஹிம் மற்றும் மருமகன் செய்ன் மர்சூக் ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

இதன் பிரகாரம் ட்ரஸ்ட் எனும் நம்பிக்கையாளர் சபை ஒன்றை ஏற்படுத்தி சமூக நலத் திட்டங்களுக்கு அந்த இல்லத்தை பயன்படுத்துவதற்கான ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக இக்கூட்டத்தில் றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

இதையடுத்து பலரது பல்வேறுபட்ட கருத்துகளும் ஆலோசனைகளும் பரிசீலிக்கப்பட்ட நிலையில், தொழில் வழிகாட்டலுடன் கூடிய கல்வி வள நிலையமொன்றை அமைப்பது தொடர்பிலான யோசனைகள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

குறிப்பாக பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யத் தவறுகின்ற மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளையும் தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் கற்பித்து, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிறந்த தொழில் வாய்ப்புகளை பெறுவதற்குத் தகுதியான தேர்ச்சிமிக்க நபர்களாக அவர்களைக் கட்டியெழுப்புவதற்கான கல்வித் திட்டமொன்றை அங்கு நடைமுறைப்படுத்துவது குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சாய்ந்தமருது ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா மௌலவி, பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், சுங்கத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஏ.ஜெலீல், பாடசாலை அதிபர்களான யூ.எல். நஸார், எஸ்.எம்.சம்சுதீன், ஓய்வுபெற்ற அதிபர்களான எம்.எம்.இஸ்மாயில், ஐ.எல்.ஏ.மஜீத், தென்கிழக்குப் பல்கலைக்கழக கணக்காய்வு உத்தியோகத்தர் கலீல் எஸ். முஹம்மத், கல்முனை பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினரான நஜீமா ஜ/வலர்ஸ் உரிமையாளர் எம்.எம். மன்சூர் உட்பட பலரும் பங்கேற்றிருந்தனர். (05)

# பாரதிபுரம் மகாவித்தியாலயத்தில் முதலாம் தர மாணவர் வரவேற்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் கோட்டத்தில் உள்ள பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பு மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி கடந்த வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், ஓய்வு நிலை கோட்டக் கல்வி பணிப்பாளர் வெற்றிவேல் , மூதூர் வலயக் கல்வி பணிமனை அதிகாரிகள், பெற்றோர், ஆசிரியர் என பலரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தால் புதிதாக முதலாம் வகுப்பிற்கு சேர்ந்த 28 மாணவர்களுக்கும் புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் உள்ளிட்டோர் வழங்கினர். (05)

# காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் விளையாட்டு மைதான அங்குரார்ப்பணம்

(கே எ ஹமீட்)

காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் தரம் 01 இற்கு அனுமதி பெற்ற மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப நிகழ்வும் பாடசாலையின் விளையாட்டு மைதான அங்கு ராப்பண நிகழ்வும் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ்.ஐ. யாசீர் அரபாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.



நிகழ்வின் போது தரம் ஒன்று மாணவர்கள் வரவேற்கப்பட்டதுடன் பாடசாலையின் நீண்ட காலத் தேவையாகக் காணப்பட்ட விளையாட்டு மைதானம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2024இல் வெளியிடப்பெற்றது.